**கவிதைப் போட்டி 7**

**நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (38)**

நாளை என்ற நாளே.......
பெறும் கனவுதானே......
கணினியில் வேளையும் கைபேசியில் வாழ்க்கையும்
புகைப்பட காதலும் திரைப்பட எண்ணமும்
நான்கு சுவருக்குள் முடிந்துவிட்டது இந்த வாழ்க்கை......

விண்வெளியில் பறந்திட வேண்டும் என்ற ஆசையில்...........
வெறும் காலில் தரையிறங்க தயங்குகிறான்......
பாதங்கள் மண்மீது படாமலே
விரல்நுனியில் உணவை தேடுகிறான்.....

சுவாசிக்கும் காற்றில் நட்சுபுகை
உண்ணும் உணவில் சத்தில்லை
பூமிஎங்கும் தூய்மை இல்லை
புதிய நோய்களுக்கு இங்கு பஞ்சமில்லை....

அறிவியல் வளர்ச்சியை அதிகரித்து கொண்டே
அவன் ஆயுளின் அளவை குறைத்து கொள்கிறான்...
விஞ்ஞான உலகில் விண்ணையே பார்த்து
கற்பனை உலகில் கனவில் மிதக்கிறான்......

இன்றைய தலைமுறையின் கனவே
அவன் வாழ்க்கையை
ஏளியாய் இயந்திரத்தன்மையாய்
மாற்றுவதுதான்........

நிஜத்தில் நடக்காததை
கற்பனையில் நடத்துவதே கனவு
சிலருக்கு வாழ்க்கையே கனவுதான்

-கனவுகளில் கரைந்தவள்

************